
பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
இன்று
கர்த்தராகிய
கிறிஸ்து என்னும்
இரட்சகர்
உங்களுக்குத்
தாவீதின் ஊரிலே
பிறந்திருக்கிறார்.
லூக்கா 2:11
செய்தி மலர்
2021
டிசம்பர்
இதழ் : 8
மலர் : 18



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர,சகோதரிகள்,வாலிபர்கள், மற்றும் சிறுபிள்ளைகள் யாவருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் கர்த்தர்தாமே நம் ஒவ்வொருவரையும், சுகத்தோடும், பெலத்தோடும் காத்துக்கொண்டார் , எல்லா ஆராதனைகளிலும் கர்த்தருடைய நாமத்தை மகிமைபடுத்த தேவன் கிருபை செய்தார்,

மேலும் கடந்த மாதம் நம் சபையின் 45 ஆம் ஆண்டு நிறைவு விழாவையும் மற்றும், விடுமுறை வேதாகபள்ளியின் 19 ஆம் ஆண்டு நிறைவு விழாவையும் ஆண்டவரின் நாம மகிமைக்காக வெகு விமரிசையாக கொண்டாட தேவன் கிருபை செய்தார். அதன் நிமித்தம் சபையின் சகோதரா சகோதரிகள் மற்றும் விசுவாச குடும்பங்களின் சார்பாக தேவனுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.
அதற்காக ஜெபித்த உடல் உழைப்பு கொடுத்து ஒத்துழைத்து பொருளுதவி செய்து, உதவிய அனைத்து விசுவாச குடும்பங்கள் மற்றும் சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவரின் நாமத்தில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்று நடந்த நிகழ்சிசிகள் ஒவ்வொன்றிலும் தேவ நாமம் மகிமையடைந்தமைக்கு தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். குறிப்பாக சபையின் சிறுபிள்ளைகள்,மற்றும் வாலிப பிள்ளைகள் ஆடல் பாடலினாலும், சபையின் சகோதரிகள், மற்றும் சபையின் வாலிப சகோதரர்கள், தன்னுடைய தாளந்தை தேவனுடைய நாமத்திற்கென்று அற்பணித்த விதத்தை நினைத்து தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன், பங்குபெற்ற ஒவ்வொரு தேவ பிள்ளைகளை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீர்வதிக்கிறேன்.

**இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். (லூக்கா 2:11)**

நம்முடைய ஆண்டவர் கிட்டதட்ட சுமார் 2021 ஆண்டுகளுக்கு முன் நமக்காக நம்முடைய பாவங்களை தீர்க்கவந்த தேவ ஆட்டுகுட்டியாக விண்ணுலகம் துறந்து மண்ணுலகம் வந்தார். நம்மையெல்லாம் அந்தகார இருளில் இருந்து ஆச்சர்யமான ஒளி வெள்ளத்திற்கு அழைத்து வந்த அந்த தேவன் நமக்காக பிறந்தார், அந்த நினைவை கொண்டாட ஒரு விழாவாக குடிப்பதும், புசிப்பதும் இல்லாது, அவர் நமக்கு காட்டிச் சென்ற ஜீவ பாதையில் நம்மை நடத்த நம்மை நாமே ஆயத்தமாக்கி கொள்வோம்.

3 நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். ( ஏசாயா 9:6)

ஏசாயாவின் புத்தகத்தில் 9:6ல் இப்படியாக வாசிக்கிறோம்.

வேதத்தில் தேவனுக்கு ஆநேக நாமங்கள் உண்டு அதில் ஒன்றுதான் அவர் அதிசயமானவர் உலகத் தோற்றத்திற்கு முன்பாக தேவன் வார்த்தையாக இருந்தார். அந்த வார்த்தை மாம்சமாக இந்த மண்ணுலகுக்கு வந்து உதிப்பதற்கு முன் பிதா ஏசாயா தீர்க்கதரிசிக்கு உரைத்த வார்த்தையைதான் நாம் மேலே வாசித்த வார்த்தை

ஆண்டவர் இயேசு இந்த உலகத்தில் பிறந்தது எத்தனை மகிழ்ச்சி எத்தனை ஆனந்தம், இந்த ஆண்டவருடைய பிறப்பை முழு உலகமும் கொண்டாடுகிறார்கள் என்பது சிந்திக்க கூடிய ஒரு காரியம்,

வேதத்திலே மிக அற்புதமான ஒரு வார்த்தை உண்டு அந்த வார்த்தை யோவான் எழுதிய அதிகாரம் 4 ல் 42 ஆம் வசனம் அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே, கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

சமாரிய பெண்ணின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தில் இருந்து இந்த வசனத்தை வாசித்தோம். அந்த பெண்ணின் வாழ்க்கை மாற்றபட்டது அவள் ஊரார் எல்லோரும் இயேசுவினிடத்தில் வந்தார்கள். ஊரார் சொன்ன அந்த ஒரு வார்த்தை என்னை மிகவும் கவர்ந்தது என்ன வார்த்தை என்றால் அவர் மெய்யாகவே உலக இரட்சகர் அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

இயேசு கிறிஸ்து யார் அவர் உலக இரட்சகர், உலகத்திலே ஒரு குடும்பத்தில் ஒரு நபர் பிறப்பார் என்றால் அந்த குடும்பம் அந்த நபரின் பிறந்த தினத்தை கொண்டாடும், ஒரு நாட்டில் தலைவருடைய பிறந்தநாளை அந்த நாட்டில் உள்ள அவரது தொண்டர்கள் அவரது நாட்டு பிரஜைகள் அவரது பிறந்த நாளை கொண்டாடுவார்கள். ஆனால் முழ உலகமே ஒருவருடைய பிறந்தநாளை கொண்டாடுகிறது என்றால் நிச்சயமாகவே அவர் இந்த முழு உலகத்தில் சொந்தக்காரர் என்பதை நாம் தெள்ள தெளிவாக அறிந்து கொள்ள முடியும் பிரியமானவர்களே!

இங்கு இந்த சம்பவம் சமாரியாவில் உள்ள உள்ள ஒரு ஸ்திரியின் மூலமாக அங்குள்ள மக்கள் சொன்னார்கள்.

நம்முடைய ஆண்டவர் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கோ குறிபிட்ட மதத்தை சார்ந்தவர்ளுக்கோ அல்லது குறிப்பிட்ட நாட்டிற்கோ, குறிப்பிட்ட இனத்திற்கோ அவர் இரட்சகர் அல்ல இந்த முழு உலகத்திற்கும் இரட்ச்சகர். உதாரனமாக நம்முடைய ஆண்டவர் மத்தேயு அதிகாரத்தில் மத்-11:28 வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் **என்னிடத்தில்** வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

ஒரு குறிப்பிட்ட ஒருவரை ஆண்டவர் அழைக்கவில்லை நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் என்று அழைப்பு விடுக்கிறார்

நம்முடைய ஆண்டவர் ஒருவருக்கு சொந்தமானவர் அல்ல இந்த பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் அவர் இரட்சகர் என்பது இந்த ஆதார வசனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இன்னுமொரு சம்பவம் இயேசு கிறிஸ்து பிறந்த பொழுது தேவ தூதர்கள் வந்து "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.இன்று கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். (லூக்கா 2:10,11) என்ற நற்செய்தி சொன்ன பொழுது, தேவதூதர்கள் சொன்ன முக்கியமான ஒரு குறிப்பிட்ட வார்த்தை "எல்லா ஜனத்துக்கும்" என்ற ஒரு பதத்தை உபயாகிக்கிறார்கள் நம்முடைய ஆண்டவருடைய பிறப்பு என்பது எல்லா ஜனத்திற்கும் நற்செய்தி, ஆம் பிரியமானவர்களே கிறிஸ்துவின் பிறப்பு முழு உலகிற்கும் சந்தோஷம்.

ஆனால் குறிப்பாக ஒரு சிலர் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்றால் ஆடை அலங்காரம் உணவு கொருட்களை தயாரிப்பதற்கும் கோலாகல கொண்டாட்டத்திற்கும் கொடுத்து விட்டு, இந்த கிறிஸ்து பிறந்த நாளின் முக்கியத்துவத்தை விட்டுவிடுவதுதான் வருந்ததக்க ஒரு காரியம்

மேலும் கிறிஸ்மஸ் என்பது தேவன் நம்மோடு வாழ விண்ணுலகில் இருந்த மண்ணுலகிற்கு இறங்கி வந்த நாள். தேவனே நம்மோடு இருக்க திருவுளம் பற்றியதால் நாம் அனைவரும் ஒருவரோடு ஒருவர் இணைந்து அன்போடு, நம்மில் பொருள் படைத்தவர்கள் உள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்து இயேசுவின் அன்பை வெளிபடுத்தி கொண்டாட வேண்டிய ஒரு நன் நாள் இது.

கிறிஸ்மஸ் கொண்டாட வேண்டிட மூன்று காரியங்கள் Celebration, salvation, motivation.கொண்டாட்டம், இரட்சிப்பு , ஊக்குவிப்பது ,

ஆண்டவரை கொண்டாட வேண்டும், அவர் நம் வாழ்வில் செய்த நன்மைகளுக்காக. பாவ மன்னிப்பின் நிச்சயத்தை பெற்று கொண்டோம் என்கிற முடிவு, இன்று ஆண்டவர் வந்தாலும், இரட்சிக்கபட்டு பரலோகத்தில் ஆண்டவரை முக முகமாய் காண்போம் என்கிற நிச்சயம் . நம்முடைய சாட்சியால் நம்முடைய நடத்தையால் மற்றவர்களை கிறிஸ்துவை அறிய செய்வது, அந்த நாட்களில் நாம் பாவம் செய்து இருளில் இருந்த நேரத்தில் நம் வாழ்வில் ஒளிவிளக்காய் வந்தார் இயேசு கிறிஸ்து, இன்றும் மரித்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்கு ஆண்டவரை அறிவித்து அவர்களும் பிழைக்க ஆண்டவரை அவர்களுக்கு அறிவித்து அவர்களையும் கிறிஸ்துவிற்குள் பிழைக்க ஜெபிப்போம்.

கடைசியாய் சத்திரத்தில் இயேசுவிற்கு இடமில்லை என்று அவரை முன்னனையில் அனுப்பினார்கள்.ஆடுகளை பராமரிக்கக்கூடிய இடமாகிய முன்னனையில் இடம் கொடுத்தார்கள். ஏனென்றால் சத்திரத்தின்

 உடைமையாளர் இடமில்லை என்று சொல்லிவிட்டார். கர்பவதியாய் குழந்தையை பெறும் நேரம் வந்த போது எங்காகிலும் அடைக்கலம் புக வேண்டும் என்று நினைத்த யோசேபுக்கும் மரியாளுக்கும் சத்திரத்தில் இடம் கிடைக்கவில்லை, இதன் பின்னனி நாம் அறிந்த பகுதிதான்

1. உங்கள் வாழ்க்கையில் கண்டிப்பாக ஆண்டவருக்கு ஒரு இடம் கொடுக்க வேண்டும், அப்படி இடம் இல்லை என்றாலும் இடத்தை நீங்கள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இந்த சத்திரத்திரம் என்கிற உங்களிடத்தில் அவரை அனுமதிப்பதற்காக தேவைபட்டால் வேறு யாரையாவது சத்திரத்தில் (தீமைகள், பாவங்கள்,) வெளிய அனுப்படவேண்டும் என்று நினைத்தால் அவைகளை வெளியே அனுப்பிவிட்டு இயேசுவை உள்ளே அனுமதியுங்கள் நீங்கள் ஆசீரவதிக்கபடுவீர்கள்.

2. ஆண்டவர் தற்பொழுது கொடுக்கக்கூடிய ஆசீர்வாதங்கள் நம்முடைய வாழ்வில் போதுமானதாக இல்லாமல் இருக்கலாம் ஆனாலும் நீங்கள் அதை அற்பமாய் எண்ணாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள். தற்சமயத்திற்கு அவர் கொடுக்கும் ஆசீர்வாதத்தை நீங்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு கொஞ்சத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால் அநேகத்திற்கு அதிகாரியாக்கும் மகத்துவமான நேரங்கள் உங்கள் வாழ்க்கையில் நிச்சயம் வரும். முன்னனையில் இடம் போதுமானது இல்லைதான் ஆனாலும் அந்த கொஞ்ச இடம் ஆண்டவருக்கு போதுமானதாக இருந்தது. ஆண்டவர் இந்த மண்ணில் வருவதற்கு. நமக்கு ஆண்டவரால் கிடைத்த அந்த கொஞ்ச நன்மைக்காக நாம் நன்றி சொல்வோம் அவரை ஆராதிப்போம்.

3. ஆண்டவர் யாரையும் உயர்த்துவதற்கு முன் அவர் தாழ்த்துவார். அப்படி தாழ்த்தும் நேரத்தில் நாம் கர்த்தர் சமூகத்தில் காத்திருந்தால் கண்டிப்பாக உயரம்தான் அதன் முடிவு. பிரியமானவர்களே இன்றைக்கு முன்னனை நாளை ஞானிகளின் வருகை, இன்றைக்கு முன்னனை நாளை ஈவுகள் அவிழ்கபடுகின்றன, இன்றைக்கு முன்னனை நாளை தூதர்கள் அறிவிக்கிறார்கள், உலகத்தின் நற்செய்தியை அறிவிக்கிறவர் வந்து விட்டார். பிரியமான தேவ ஜனமே ஆண்டவரின் ஜனனத்தை கொண்டாட கூடிய இந்த திருநாட்களில் ஆண்டவருக்கு இடம் கொடுப்போம் அவரின் ஆசீர்வாதத்தில் திருப்த்தியாவோம், அவரின் உயர்த்துதலுக்கு நம்மை தாழ்த்தி அவரிடம் ஒப்பு கொடுப்போம். கர்த்தர் தாமே நம்மை ஆசீரவதிப்பாராக

இந்த மாதம் நடைபெறும் ஆரதனைக்களுக்காக ஜெபித்து கொள்ளுங்கள், தவறாமல் அனைத்து ஆராதனையிலும் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்லுங்கள் தேவ சமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர்
ஜெயசேகர்

## கிறிஸ்மஸ் செய்தி

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து பரிசுத்த பவுல் கூறுகிறார் "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்" என்று. (கொலோ–1:15)
ஆம் காணக்கூடாத இறைவன் மனித உருக்கொண்டு காணக்கூடியவராய் வந்தார். ஆனால் உலகம் உண்டாவதற்கு முன்னமே அவர் வாழ்ந்து கொண்டிருந்தார். அல்லேலூயா.
நம் இயேசு அவ்வளவு வல்லமை வாய்ந்தவர். நம்மோடு என்றென்றைக்கும் தங்கியிருக்கும் இம்மானுவேலராக இயேசு கிறிஸ்து வெளிப்பட்டார். ஆகவே எதைக்குறித்தும் கவலைப்படவேண்டாம். மனசஞ்சலங்கள் பாரங்கள் எல்லாவற்றையும் ஆண்டவர் பாதத்தில் வைத்து விடுங்கள். அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் அவதரித்ததால் நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களை கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

### 1. இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுதலையாக்கிட . . .

இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்.(கொலோ–1:13) பாவ, சாப, நோய், பிசாசு போன்ற இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை மீட்டெடுத்து ஒளியின் பிள்ளைகளாய் மாற்றும்படிக்கு இயேசு கிறிஸ்து மனு உருக்கொண்டு இந்த மண்ணில் அவதரித்தார். இதைத்தான் ஏசாயா தீர்க்கதரிசி "இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தை கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது. அந்த ஜாதியை திரளாக்கி அதற்கு மகிழ்ச்சியை பெருகப்பண்ணினீர்.அறுப்பில் மகிழ்கிறது போலவும் கொள்ளையை பங்கிட்டுக்கொள்ளுகையில் களிகூறுகிறது போலவும் உமக்கு

முன்பாக மகிழ்கிறார்கள். மீதியானியரின் நாளில் நடந்தது போல அவர்கள் சுமந்த நுகத்தடியையும் அவர்கள் தோளின் மேலிருந்த மிலாற்றையும் அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப்போட்டீர். அமளியாள் யுத்தம் பண்ணுகிற வீரருடைய ஆயுத வர்க்கங்களும் இரத்தத்தில் புரண்ட உடுப்பும் அக்கினிக்கு இரையாக சுட்டெரிக்கப்படும். நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு எனப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவருடைய ராஜ்ஜியத்தையும் அவர் திடப்படுத்தி அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை. சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும். ஆண்டவர் யாக்கோபுக்கு ஒரு வார்த்தையை அனுப்பினார். அது இஸ்ரவேலின் மேல் இறங்கிற்று” (ஏசாயா-9:2-8)

இயேசு இந்த உலகத்தில் நடமாடின பொழுது நோயினால் பீடிக்கப்பட்டவர்களை சுகப்படுத்தினார், சாபங்களை நீக்கினார், பிசாசின் கட்டுகளை அவிழ்த்தார், பாவங்களை மன்னித்தார், மக்களுக்கு ஒளியுள்ள புதுவாழ்வை தந்தார். இன்றைக்கும் அவரை விசுவாசித்து இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறபொழுது இதேவிதமான விடுதலையை தருகிறார். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை இன்றைக்கும் மாறாததாயிருக்கிறது. அவரை விசுவாசிப்போம், இரட்சிப்பை பெற்றுக்கொள்வோம்.

## 2.பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைய . . .

ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு நம்மை தகுதியுள்ளவர்களாக்கினவரும் (கொலோ-1:12)ஞானவான்கள் ஆகாய மண்டலத்தில் ஒளியைப் போலவும் அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். (தானி-12:3)இப்படிப்பட்ட பரிசுத்தவான்கள் வாசம் செய்கிற பரலோக ராஜ்ஜியத்தை நாமும் சுதந்தரிக்கும்படியாய் அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பை அருள்செய்து நம்மையும் தகுதியுள்ளவர்களாய் மாற்றினார். (கொலோ-1:14)

ஆம் பிரியமானவர்களே, தகுதியில்லாத நம்மை தகுதிபடுத்த இயேசு இந்த உலகத்தில் வந்தார். நம்மையும் பரிசுத்தவான்களோடு கூட ஐக்கியப்படுத்தினார். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாய் இருக்கவில்லை.இப்பொழுதோ அவருடைய ஜனங்களாய் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாய் இருந்தீர்கள்.இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி, அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1-பேது-2:9,10)

ஆண்டவருடைய அன்பு எவ்வளவு பெரியது. இந்த கிறிஸ்மஸ் நாட்களிலே அவருடைய அன்பை குறித்து அதிகமாய் தியானிப்போம். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார்.

## 3. சபைக்கு தலையாக . . .

அவரே சபையாகிய சரீரத்துக்கு தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராய் இருக்கும்படி அவரே ஆதியும், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். (கொலோ-1:18) நம்முடைய சரீரமாகிய சபைக்கும் அவரே தலையாக இருக்கிறார். எப்பொழுதெல்லாம் இயேசுவின் நாமத்தினாலே ஓரிடத்தில் கூடி வருகிறோமோ? அந்த இடத்தில் இயேசு பிரசன்னமாகிறார். மனப்பாரங்களோடு அவர் சமூகத்தில் வரும்பொழுது அற்புத விடுதலையைத் தருகிறார். தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும் இரண்டாவது தீர்க்கதரிசிகளையும் மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும் பின்பு குணமாக்கும் வரங்களையும் ஊழியங்களையும் ஆளுகைகளையும் பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். அதுமட்டுமல்ல தம்முடைய பரிசுத்த ஆவியினாலே ஞானத்தை போதிக்கும் வசனத்தையும், அறிவை உணர்த்தும் வசனத்தையும் விசுவாசத்தையும், குணமாக்கும் வரங்களையும்,அற்புதங்களை செய்யும் சக்தியையும், தீர்க்கதரிசனங்களையும், ஆவிகளை பகுத்தறிகிற வரத்தையும், பற்பல பாஷைகளை பேசவும், அதை வியாக்கினம் பண்ணவும் கிருபை தருகிறார். எத்தனை ஆச்சரியம் பாருங்கள். சபையாக கூடி வரும்பொழுது மேற்சொன்ன அத்தனை ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளுகிறோம். (1-கொரி-12:6-28)

பிரியமானவர்களே, இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை மீட்டெடுத்து பரிசுத்தவான்களோடு பங்கடையச்செய்து சபைக்கு தலையாக இன்றும் ஆண்டவர் கிரியை செய்கிறார். அதுமட்டுமல்ல தேவ மனிதனாகிய ஆசாப் எழுதிய சங்கீதத்தில் "உமது கரம் உமது வலது பாரிசத்து புருஷன் மீதிலும் உமக்கு நீர் திடப்படுத்தின மனுஷக்குமாரன் மீதிலும் இருப்பதாக" என்று கூறுகிறார். (சங்கீ–80:17)

இன்றைக்கும் இயேசு கிறிஸ்து வலது பாரிசத்தில் வீற்றிருந்து நமக்காக பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார். அவருடைய மன்றாட்டு ஜெபம்தான் இன்றைக்கும் நமக்கு வாழ்வு கொடுக்கிறது. அப்படிப்பட்ட இயேசுவை நாம் நன்றியோடு நினைவு கூறுவோமா? ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராக இருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களையும், அகில உலக பாவங்களையும் கிருபாதார பலி அவரே. (1–யோவா–2:1,2)

ஆகவே இந்த கிறிஸ்மஸ் நன்னாளிலே இயேசு கிறிஸ்துவினால் கிடைத்திருக்கிற மேற்சொன்ன ஆசீர்வாதங்களை நமக்கு சொந்தமாக்கிக்கொள்வோம். அர்த்தமுள்ள கிறிஸ்மஸை கொண்டாடுவோம். நாமும் மற்றவர்களுடைய இருளை நீக்கி வெளிச்சம் தரவும், மற்றவர்களுடைய கட்டுகளை அவிழ்த்து விடுதலை தரவும், நித்திய வாழ்வுக்கு நேராக வழி நடத்தவும் நம்மை அர்ப்பணிப்போம்.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடுங் கூட இருப்பதாக.

கர்த்தருடைய பணியில்

உங்கள் அன்பு சகோரன்

S.ஸ்டாலின்

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; . . .
(ஏசாயா 9:6)

# ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோதரி . அனுஷா டினோ
செல்வி. நயோமி ராமர்
சகோதரி. விஜயா அந்தோனி சாமி
செல்வன். ஜோயல் ஜஸ்டின்
சகோதரி. ஷீபா ராணி வெங்கடேஷ்
சகோதரி. சசிகலா ராமர்
சகோ. பால் ராஜேஷ்
சகோதரி. கிளாடிஸ் பாப்பி சிவகுமார்
சகோதரி. சசிரேகா சதீஸ்குமார். நு
செல்வன். திரில் காட்ஸன்
செல்வன். ஜெர்ஸலின் நியா ஜோன்ஸ்
சகோதரி. ஜீனா சதீஸ்குமார்
சகோதரி. சிவ குமாரி ஜஸ்டின்
செல்வன். ஜான்சன் ராஜவேல்

செல்வி. சாயா ஸ்டாலின் சுனில் வின்ஸ்
சகோ. சிவகுமார் (ஷாம் ஜெப குமார்)
செல்வன். பென்ஜமின் ராமர்
சகோ. விபின்
சகோ. ஆல்வின் முத்தையா
சகோதரி. ஜெனிஃபா ஜோஸ்வா
சகோ. பால் ராஜசேகரன் P
சகோ. எட்வின் சாம் ஞானதுரை
செல்வன். ராக்கின் ஹெரீஷ்
செல்வி. கிரேஸ்லின் சாம் ஞானதுரை
சகோதரி. ஜாஸ்மின் மெர்ஸி பென்சாம்
செல்வி. கவிதா கொம்மையன்
சகோதரி. ஃபாபியா ராஜேஷ்
செல்வி. ஸ்டீனா ஸ்டாலின் சுனில் வின்ஸ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்(ஆதி .22:18)

திருமதி / திரு. ஜினு
திருமதி / திரு. தாஸ்
திருமதி / திரு. கிறிஸ்டோபர்
திருமதி / திரு. வேலு ராமர்
திருமதி /திரு. ஸ்டீபன். T
திருமதி / திரு. பிரசாத் சுந்தரம்
திருமதி / திரு. ஜாண்சன்
திருமதி / திரு. ஆல்வின்
திருமதி / திரு. பிபின் ரிச்சர்ட்
திருமதி / திரு. ஜெபசிங்
திருமதி / திரு. பென்சாம்
திருமதி / திரு. பால் அறிவுச்சுடர்

**. .நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள் (எரேமியா 18:6)**

# 2021 டிசம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 6:30 முதல் இரவு 8:00வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/12/2021 | சகோ. ஜெகநாதன் | சகோ. பிரசாத் |
| 12/12/2021 | சகோ. ஜான் கெட்சன் | சகோ.அந்தோனி |
| 19/12/2021 | சகோ. வில்ஸன் | சகோ. அசோக் குமார் |
| 26/12/2021 | சகோ. ஆரோக்கிய தாஸ் | சுகோ. ஆசீர்வாதம் |

## வெள்ளி ஆராதனை நேரம் காலை 9:45 முதல் 11:45 வரை மாலை 3:00 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/12/2021 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 10/12/2021 | சபையின் பாடகர்க் குழு ஆராதனை | |
| 17/12/2021 | சபையின் கிறிஸ்மஸ் பாடல் ஆராதனை | |
| 24/12/2021 | சபையின் குடும்ப கிறிஸ்மஸ் பாடல் ஆராதனை | |
| 31/12/2021 | சகோ. ஆரோக்கிய ராஜ் | சகோ. ஸ்டாலின் |

**25/12/2021 அன்று கிறிஸ்மஸ் ஆராதனை**
(இடம் – பாஹிலில் உள்ள ஜெப வீடு நேரம் – மாலை 5:30 மணி முதல் இரவு 7:30 மணி வரை)

**31/12/2021 அன்று விழிப்பு இரவு ஆராதனை**
இடம் – பாஹிலில் உள்ள ஜெப வீடு நேரம் – இரவு 10:00 மணி முதல் அதிகாலை 1:00 மணி வரை

**01/01/2022 அன்று புது வருட ஆராதனை**
இடம் – பாஹிலில் உள்ள ஜெப வீடு நேரம் – மாலை 5:30 மணி முதல் இரவு 7:30 மணி வரை

15 வயதிற்கு கீழுள்ள சபையின் பிள்ளைகளுக்கு நமது சபை வீட்டில் வைத்து அனைத்து வெள்ளிகிழமைகளிலும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது பெற்றோர்களுடன் ஆராதனையில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்லவும், ஞாயிறு ஆராதனை தற்சமயம் சபை வீட்டில் வைத்த மாலை 6:30 :மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது செவ்வாய் கிழமைகளில் குடும்ப ஆசீர்வாத ஜெபம் மாலை 6:30 மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது அனைவரும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்லவும் ( சபையின் அனைத்து ஆராதனையிலும் தவறாமல் கலந்து கொள்ளவும்)

# 2021 டிசம்பர் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1.என் தேவன் தம்முடைய -----படி உங்கள் --------ல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் ------லே நிறைவாக்குவார்.

2.இயேசுவின் நாமத்தில் முழங்கால் யாவும் முடங்கப்படும்? விடுபட்ட வார்த்தைகளை இணைக்கவும்?

3.நாய்களுக்கு எச்சரிக்காய் இருங்கள்.. என்று எங்கே வாசிக்கிறோம்?

4.நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எதை எதை குறிதது தேவனுக்கு தெரியப்படுத்தவேண்டும்?

5.கிறஸ்து எனக்கு --- , ----எனக்கு ஆதாயம்

6.ஆகிலும், எனக்கு நஷ்டமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக லாபமென்று எண்ணினேன;சரியா ? தவறா?

7.எல்லாவற்றையும் முறுமுறுப்பிலும் தர்க்கிப்பிலும் செய்யுங்கள். சரியா ? தவறா?

8.அவருக்காக எல்லாவற்றையும் என்னவென்று விட்டேன்; என்னவாக எண்ணுகிறேன்.?

9.கர்த்தருக்குள் --- --- --- ---- சொல்லுகிறேன்.

10.பவுல் எதை முன் குறித்து இலக்கை நோக்கி தொடருகிறார் ?

11.இதினிமித்தம் நீங்களும் துக்கித்து என்னோடு கூட துக்கப்படுங்கள் சரியா ? தவறா?

12.நியாயபிரமானத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டபடாதவன். சரியா ? தவறா?

13.தம்மை பெருமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார் சரியா?தவறா?

14.பக்த்தி வைராக்கியத்தின்படி சபையை சந்தோஷபடுத்தினவன். . சரியா ? தவறா?

15.அவர் யாருடைய ரூபமாய் இருக்கிறார் ?

**விடைகளை வருகின்ற 20-12-2021க்குள் (whatsApps #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிபிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் பிலிப் 1,2, 3.4. ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்**

**- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -மத்தேயு 7:7**

## 2021 –அக்டோபர் மாத வேத வினாவுக்கு விடை

1. 52 நாட்களுக்குள் நெகே. 6:15
2.நாங்கள் எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை தாழ்த்துகிறதற்கும், எங்களுக்காகவும் எங்கள் பிள்ளைகளுக்காகவும், எங்கள் சகல பொருள்களுக்காகவும், செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும். எஸ்றா. 8:21
3. நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக் கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே. எஸ்த. 4:13.
4. வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக் குட்டியை. நெகே. 9:18
5. பார்வைக்கு நன்றாயிருந்ததினால். எஸ்த. 2:8-9
6. சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள். நெகே. 1:3
7. மறு ஜாதியான ஸ்திரீகளை விவாகம் பண்ணினதினால். எஸ்றா. 10:10
8. இரண்டு முறை. எஸ்த. 7:2
9. ஜனங்கள் எல்லோரும் எழுந்து நின்றார்கள். நெகே. 8:5
10. பொன் தட்டுகள்... ... ... ஐயாயிரத்து நானூறு. எஸ்றா.1:8-11

### 2021 அக்டோபர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. வனிதா காளிமுத்து
Sis. ஹெலன் ஷீஜா ராபின்
Sis. நகோமி ஜான்ஸன்
Sis. பியூலா மெர்ஸி பால்
Bro. ஜான்ஸன்

........உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்.. *ஆதியாகமம் 12:7*

## கனம் தாமஸ் ராக்லண்டு( 1815–1858)

தாமஸ் ராக்லண்டு அவர்கள் இங்கிலாந்து தேசத்தில் பாரம்பரியம்மிக்க பிரபுக்கள் குடும்பத்தில் 1815 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் நாள் லிவர்பூல் என்ற இடத்தில் பிறந்தார். சிறுவயதில் இவர்கள் பெற்றோர்கள்.காலரா நோயில் இறந்தமையால் அவருடைய தாய்மாமாவின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார்.

இளமையில் பக்தியிலும் ஒழுக்கத்திலும் வளர்க்கபட்ட ராக்லண்டு அவர்களின் வாழ்க்கையில் திருப்பு முனையாக ஏற்படுத்தியது அவருடைய ஓய்வு நாள். ஆசிரியர் ராக்லண்டு கல்வியிலும் கிறிஸ்துவின் மீதான விசுவாசித்திலும் சிறந்து விளங்கினார். ராக்லண்டு அவர்கள் இங்கிலாந்தில் உலக பிரசித்தி பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் கணிதத்தில் அறிவர் பட்டம் பெற்று சிறந்த கணித ஆசிரியராக அதே கல்லூரியின் பேராசிரியராக பணியாற்றிகார்.

ராக்லண்டு அவர்கள் கிறித்துவ ஊழியம் செய்ய விருப்பம் கொண்டு தன்னுடைய பேராசிரியர் பணியை விட்டு விட்டு அங்குள்ள வேதாகம கல்லூரியில் சேர்ந்து எபிரேயம், கிரேக்கு, மற்றும் லத்தின் மொழிகளில் புலமை பெற்றார். ஆகையால் 1842ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தூய. பவுலின் ஆலயம் நியோட்டின் என்ற இடத்தில் குருவானவராக பணியாற்றினார்.

இந்த சூழ்நிலையில் இங்கிலாந்து தேசத்தின் (Church Mission Society(CMC) என்ற சங்கத்தின் மூலம் நடைபெற்ற மிஷனரி அறைகூவல் கூடுகையில் இயேசுவானவர் இந்திய தேசத்தில் நற்செய்திபணி அறிக்கை அழைப்பதை உணர்ந்தார்.

ஆகவே இந்த அறை கூவலை ஏற்றுக் கொண்டு தன்னை இங்கிலாந்தில் குருத்துரவ பணியில் இருந்து விடுவித்துக்கொண்டு நற்செய்தி பணிக்காக தன்னை அர்பணித்தார். ஆகவே அங்கிருந்த CMC மிஷனரி ஸ்தாபணத்தின் மூலம் 1845 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை வந்தடைந்தார். அங்கு தமிழ் புலவர்களிடம் தமிழ் கற்றுக்கொண்டு பின்னர் வட திருநெல்வேலி பகுதியில் முதல் மிஷனரியாக நற்செய்தி பணிசெய்ய வடக்கே கல்பட்டு , தெற்கில் சிவகாசி, கிழக்கில் விருதுநகர், மேற்கில் ஸ்ரீவில்லிபுத்தூர், பகுதியில் நற்செய்திபணி அறிவிக்க அனுப்பபட்டார். தாமஸ் ராக்ரண்டு அவர்கள் பனை மரங்கள் மிகுதியாய் இருந்த சிவகாசி பகுதியை தேர்வு அங்கு ஒரு ஓலை குடிசையில் தங்கி தன்னுடைய நற்செய்தி பணியை ஆரம்பித்தார் .

(அடுத்த மாதம் தொடரும் . . . )

## வாலிபர் பகுதி

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.**

**தேவ பிள்கைளாகிய நமக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரண்டு பிரதான கற்பணைகளை கை கொண்டு நடக்க வேண்டுமென்று மத்தேயு 23:37,40ல் பார்க்கின்ற போது முதலாவது பிரதாண கற்பனையான உன் தேனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உள் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக" மேலும் இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாவது கற்பனையான "உன்னடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக" என்று வாசிக்கிறோம்.**

**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே முதலாவது நாம் நம்முடைய தேவனிடத்தில் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் அன்பு கூற வேண்டுமென்று அண்டவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். மனிதர்களாகிய நாம் இந்த மூன்று விதமான காரியங்கள் நம்மை நடத்துவதை காண முடிகிறது முதலாவது நம்முடைய இருதயத்தின் நினைவுகளின் படியும், நம்முடைய ஆத்தும வாஞ்சையின்படியும், நம் மனதின் எண்ணத்தின்படியும், நடக்கின்றவர்களாக காணப்படுகிறோம்.**

**அனுதினமும் நம் இருதயமும் மனதும், ஆத்துமாவும், நமக்காக நம்முடைய பாவங்களுக்காக, நம்முடைய அக்கிரமங்களுக்காக, நம்முடைய மீறுதலுக்காக அடிக்கப்பட்டு, நொருக்கப்பட்டு நம்முடைய பரிசுத்த இரத்தத்தை நமக்காக சிந்தி, சிலுவையின் மரண பரியந்தம், தம்மை தாமே ஒப்பு கொடுத்து, நம்மை இரட்சித்து, நம்மை மீட்டுக் கொண்ட நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை வெளிபடுத்துகிறதோ அல்லது இந்த உலகத்தின் மாயையான திரண்ட ஆஸ்தி, உயர்கல்வி, செல்வாக்குகளையோ? என்று நம்மை நாமே சோதித்து அறிவோம்,**

**பிரியமானவர்களே 1 யோவான் 2:15,16,17ல் பார்க்கும் பொழுது உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின்**

இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்தில் உள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். பிதாவினால் உண்டானவைகளல்ல அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் என்று வாசிக்கிறோமே ஆகையால் பிரியமானவாகளே நாம் இந்த உலகத்தின் மாயைகளை மேன்மைபடுத்தும்படி எச்சரிக்கையாக இருக்கடவோம்.

முதலாம் கற்பனைக்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனையாக " உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்று வாசிக்கிறோம், பிரியமானவர்களே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் நம்மை நேசிப்பது போல பிறரையும் நேசிப்பவர்களாக காணப்படவேண்டும் என்று நம்மிடம் எதிர்பார்க்கிறார், கொலேசியர் 3: 12,13 ஐ பார்க்கும் போது "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு. ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." என்று வாசிக்கிறோமே ஆகையால்

பிரியமானவர்களே பிறருடைய குறைகளை மன்னிக்கிற – வர்களாகவும், நாம் காணப்பட்டு ஆண்டவருடைய பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாக நாம் காணப்படுவோம். ஏனென்றால் மத்தேயு 7:22,23ஐ பார்க்கும் பொழுது அநேகர் இந்த உலகத்தின் மாயைகளுக்கு இடங்கொடுத்ததின் நிமித்தம், ஆண்டவருடைய வருகையில் கைவிடப்பட்டு போவார்கள் என்று பார்க்கிறோமே.

பிரியமானவர்களே நாமும் அவர்களில் ஒருவாராய் காணாதபடிக்கு இந்த பிரபஞ்சத்தின் மாயைகளுக்கு நம்மை விலக்கி ஆண்டவருடைய கற்பனைகளை நிறைவேற்றுபவர்களாக காணப்படுவோம்
இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு மகிமையுண்டாவதாக.

# தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் பூமியிலே சமாதானம்

கிறிஸ்த்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

லூக்கா 2:13,14 அந்தசணமே பரமசேனையின் திரள் அந்த தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவாதாக என்று துதித்தார்கள்.

பரமசேனையின் திரள் தேவனை துதிக்கும் இவ்வசனத்தின் அர்த்தத்தை பலரும் சாதாரணமாக எடுத்து கொள்வது "இயேசு கிறிஸ்துவின் பிறப்பினால் பூமியில் மக்களிடையே சமாதானம்" என்று இது ஒரு மிக நல்ல காரியமே. ஆனாலும் உண்மையில், பரம சேனையின் திரள் பாடும் "சமாதானம் என்ன சமாதானம்" என்று நாம் வேதத்தை ஆராய்ந்து பார்போமானால் இது நாம் வழக்கமாக எடுத்துக்கொள்கிற பூமியிலே மனிதர்களிடையே சமாதானம்" அல்ல. அது இதை விட மேன்மையான ஒரு சமாதானம் என்பது தெளிவாக புரியும். இன்றைய உலகில் மக்களுக்குள், நாடுகளுக்குள், குடும்பங்களுக்குள் நிலவும் "சமாதானத்தை" பார்க்கும்போது நிச்சயமாக இந்த சமாதானம் அல்ல என்பது நன்கு புரியும். இயேசுவின் சொந்த வார்த்தைகள், நாம் வழக்கமாக எடுத்துக் கொள்ளும் அர்த்தத்துக்கு எதிராக இருப்பதை நாம் கீழ்க்காணும் வசனங்களில் இருந்து புரிந்து கொள்ளலாம். இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு ஏற்றதான ஒரு அர்த்தத்தையே நாம் எப்போதும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மத்தேயு-10:34,35 பூமியின் மேல் சமாதானத்தை அனுப்ப வந்தேன் என்று எண்ணாதிருங்கள். சமாதானத்தை அல்ல பட்டயத்தையே அனுப்ப வந்தேன்.

எப்படியெனில் மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன். லூக்கா 12:51 , நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்க வந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"சமாதானம்" என்ற வார்த்தையின் அர்த்தம் போர் இல்லாமல் இருப்பது, சுமூகமாக உறவு நிலை, சச்சரவுகள் இல்லாத நிலை, அமைதி, இணக்கம்.' சமாதனம் என்பதின் எபிரேய வார்த்தை-ஷாலோம் என்பது ஆகும்.

தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் உள்ள சமாதானத்தின் ஒரு இடை விளைப்பொருள்தான் (By product) உலகப் பிரகாரமான சமாதானம்.

பணம், செல்வம், சொத்து, பதவி என்று பல இருந்தும், இன்று பலரும் வாழ்க்கையில் சமாதானம் இருக்கிறார்கள். குடும்பங்களில், வீடுகளில், தேசங்களில், சொந்த வாழ்கையில் சமாதானம் இல்லை. விசுவாசிகள், ஊழியக்காரர்கள் பலருக்கு கூட சமாதானம் இல்லை. சமாதானத்துக்காக பலரும் எதையும் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். எதைக் கொடுத்தும் சமாதானத்தை வாங்க முடியாது. அவர்கள் கொடுக்க வேண்டியது "தங்களை இயேசுவுக்கு". அப்போது அவர்கள் தேவனிடம் சமாதானம் பெற்றுக் கொள்வார்கள். அந்த சமாதானத்தின் ஒரு இடைவிளைவுப் பொருளாக " உலகப்பிரகாரமான சமாதானம்" வாழ்க்கையை நிரப்பும்.

வீண் ஆடம்பரங்களோடு வர்ணவிளக்குகளோடு, கவர்ச்சிகரமான விலை உயர்ந்த ஆடைகளோடு, மதுவோடு, கேக்குகளோடு, பிரியாணிகளோடு ஒரு நாள் " சந்தோஷமாய் கிறிஸ்மஸ் கொண்டாடிவிட்டு " மீதி வாழ் நாள் முழுவதையும் சமாதானம் இல்லாமல் கழிப்பதனால் என்ன பயன்?

இயேசு கிறிஸ்து தனது இரத்தத்தினால் வாங்கி தந்த இந்த தேவ சமாதானத்தில் வாழ்ந்து, மற்றவர்களையும் இந்த சமாதானத்தின் சுவிஷேசம் சொல்லி வாழ வேண்டியது ஒவ்வொரு விசுவாசியின் கடமை அல்லவா?

இதனால், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தி நமக்கு இந்த சமாதானத்தை தந்த தேவன் மகிமைப்படுவார் அல்லவா? எல்லா நாட்களிலும், குறிப்பாக இந்த, இயேசு கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடும் நாட்களிலும் இந்த சமாதானத்தோடு வாழ்ந்து, இந்த சமாதானத்தின் சுவிஷேசத்தை, சமாதானம் இல்லாமல் இருக்கும் மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுத்து அவர்களையும் இந்த சமாதானத்துக்குள் வழி நடத்தலாமே.

இயேசு கிறிஸ்து பூமியில் பிறந்ததன் மகாப்பெரிய நற்செய்தி
"தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் பூமியிலே சமாதானம்"
இந்த தேவ சமாதானத்தில் நாம் வாழ்வோம் . . .
மற்றவர்களுக்கும் இந்த தேவ சமாதானத்தை கொடுப்போம். ஆமேன்.

கிறிஸ்துவின் பிறப்பின் நல் வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி,
**எப்சிபா ஸ்டீபன்.**

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில











# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

சகோ. ஜெயசேகர்

96646444

செயலாளர்

சகோ. இயேசு ரெத்தினம்

23924262 - 97545812

பொருளாளர்

சகோ. ஜெகநாதன்

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. பிரசாத் சுந்தரேசன்

60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only